මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ ලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

மாධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

LAE\2023\27

2023.01.30

அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தினால் 2023.01.29 ஆம் திகதி வெளியிடப்பட்ட செய்தித்தாள் அறிவித்தலில் 'உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் செயன்முறையை ஆரம்பிப்பதற்கு அவசியமான வர்த்தமானி அறிவித்தலை தவிசாளரதும் ஏனைய உறுப்பினர்களதும் கையொப்பத்துடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அரசாங்க அச்சகத்திற்கு இதுவரை அனுப்பப்படவில்லை' என்று குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது. பொறுப்புள்ள அரச அலுவலரொருவர் பொறுப்பற்ற விதத்தில் இவ்வாறான அறிவித்தலொன்றை வெளியிட்டதன் மூலம் எதிர்பார்க்கும் பெறுபேறு யாதென்பது தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒரு பிரச்சினையாகும். அரசியலமைப்பிற்கு அமைய அனைத்து அரச அலுவலர்களுக்கும் தேர்தல் செயன்முறைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான நியதிச்சட்ட கடப்பாடு இருக்கின்ற நிலையிலும், அதனை நிறைவேற்றாமை தண்டனைக்குரிய ஒரு குற்றமென்று அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற நிலையிலும் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் தனது அறியாமையைப் பறைசாற்றியுள்ளார். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் 2023 ஜனவரி மாதம் 04 ஆம் திகதிய அறிவித்தலை வெளியிட்டு வேட்புமனுக் கோரியதன் மூலமே தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஆரம்பித்தது என்பதை அவர் மறந்திருப்பதாகத் தோன்றுகிறது. அதேபோல், 2017 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிற்கமைய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களே தேர்தல் பற்றிய அறிவித்தலை வெளியிடுவர் என்பதையும், இதற்கு முன்பும் அவ்வாறே செயலாற்றப்பட்டுள்ளது என்பதையும் தகவல் பணிப்பாளர் நாயகம் பொருட்படுத்தவில்லை என்பதோடு, அது தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரும் உறுப்பினர்களும் கையொப்பமிட வேண்டிய ஓர் அறிவித்தல் அல்லவென்ற அடிப்படைச் சட்ட அறிவுகூட அவருக்கு இருக்கவில்லை எனப் புலப்படுகிறது. குறித்த அறிவித்தல், மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக இன்றைய தினம் (2023.01.30) அரசாங்க அச்சகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விடயங்கள் குறித்து ஆராயாமல் செய்தித்தாள் அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலம் தனது பதவியை இவ்வாறான சிறுபிள்ளைத்தனமான நிலைக்குள் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் தள்ளியிருப்பது கவலைக்குரியது என்பதையும் அறிவிக்கின்றேன்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

ஹே.மு.தி.தி.ஹேரத்
செயலாளர்
தேர்தல் ஆணைக்குழு